Registered as a NewsPaper

விலை ரூபா 6.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 19 | 02-04-2003 | புதன்கிழமை | ஓசை 43

அழகன் ஓப்செற் பதிப்பகம்

வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புக்களையும்

■ தரமான முறையில்
■ கணனி முறையில்
■ குறித்த தவணையில்

செய்து கொள்ள வேண்டிய ஒரே பதிப்பகம்.

யாழ். சாலை, கிளிநொச்சி.

## போர்நிறுத்தத்தைக் குழப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்?

### போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சந்தேகம்

நேற்று முன்தினம் சிறிலங்கா படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது படையினரைக் கொல்வதற்காக அல்லாது போர் நிறுத்தத்தைக் குழப்புவதற்கு நடைபெற்ற தாக்குதல் போலத் தெரிகிறது என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

திருகோணமலை கடற்பரப்பிற்கு அண்மையாக சிறிலங்காப் படையினரை ஏற்றிச்சென்ற கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்கு புலிகள் மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்ட நிலையில், இதற்குத் தாங்கள் பொறுப்பல்ல என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். இதனைப்போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஏற்றுக் கொண்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் மீதான தாக்குதலுக்கும் எமக்கும் தொடர்பில்லை

### புலிகள் தெரிவிப்பு

திருகோணமலைக் கடற்பரப்பில் லங்கா முடித கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் கடற்புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக்குழு விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்ட போதே புலிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் திருகோணமலையில் இருந்து காங்கேசன் துறைக்கு துருப்புக்களை ஏற்றிச் சென்ற கப்பல் மீது நடத்தப்பட்ட மேற்படி தாக்குதலில் மூன்று படையினர் காயமடைந்தமை தெரிந்ததே

# சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஜோன் கியூம் நாளை கிளிநொச்சி வருகிறார்

### பிரிட்டிஷ், ஐரிஸ் தூதுவர்களுடன் வரும் இவரை அரசியல் துறைப்பொறுப்பாளர் சந்திப்பார்

**ஐரிஸ் சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஜோன் கியூம் அவர்கள் நாளை கிளிநொச்சிக்கு வருகை தந்து அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேசவுள்ளார். இவருடன் சிறிலங்காவுக்கான பிரிட்டிஷ் தூதுவர், ஐரிஸ் உயர் ஸ்தானிகர் ஆகியோரும் வருகை தரவுள்ளனர். இவர்கள் உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வருகின்றனர்.**

ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இவர், நாளை வன்னிக்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவருக்கு 1998இல் சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஜோன் கியூம் அவர்களுக்கு தற்போது வயது - 63 பெரிய தொழிற்கட்சியின் தலைவர். இவர் அயர்லாந்தின் இரு பெரியகட்சிகளான சமூகக்கட்சியும், தொழில் கட்சியும் பிரியும் நேரத்தில் கியூம் தனது சொந்தச் செல்

(08ஆம் பக்கம் பார்க்க)



நோர்வேயில் விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக்குழு.

## களுத்துறைச் சிறைக்கைதிகள் புத்தாண்டன்று உண்ணாவிரதம்

எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று களுத்துறைச் சிறைச்சாலைக் கைதிகள் விடுதலை கோரி அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அத்தோடு அன்றைய தினம் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்கதினம் அனுஷ்டிக்கவுள்ளதாக கைதிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த மாதம் 1ம் திகதி முதல் மார்ச் மாதம் 15ம் திகதி வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் கைதிகளில் சிலர் குடற்புண் நோய்க்கு உள்ளாகியுள்ளனர். அவர்களுக்குப் பிரத்தியேக உணவை வழங்குமாறு விடுத்த கோரிக்கையை சிறைச்சாலை

(08ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க கூட்டணிப்படைகளுக்கு ஈராக் கடும் எதிர்ப்புக் காட்டி வருகிறது

ஈராக்கின் பாக்தாத் நகரை நோக்கி முன்னேறிவரும் அமெரிக்க படையினர் மூன்று முனைகளில் ஈராக்கின் கடும் எதிர்ப்பைச் சந்தித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே ஈராக்கின் வட பகுதிக்கு படைகளையும் படைக்கலங்களையும் வான் வழியாக அனுப்புவதற்கு பிரிட்டன் படையினர் எடுத்த முயற்சியை தாங்கள் முறியடித்துள்ளதாக ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்போது பல படையினரை தாங்கள் சுட்டுக்கொன்றுள்ளதாகவும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வாகனங்கள், படைக்கலங்கள் என்பவற்றை தமது அரச தொலைக்காட்சி மூலம் காண்பித்ததாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று பாக்தாத் நகர் மீது நடத்திய கடுமையான விமானக்குண்டு வீச்சு மற்றும் ஏவுகணைத் தாக்குதலில் சதாம் ஹுசைனின் மற்றுமொரு அரண்மனையைத் அழித்திருப்பதாகத் தெரிவித்த அமெரிக்கா, பாக்தாத் நகரை தரைப்படை

(08ஆம் பக்கம் பார்க்க)

## குளத்தில் மூழ்கி மூவர் பலி

யாழ். ஊர்காவற்றுறை அருகில் குளத்தில் குளிக்கசென்ற மூன்று சிறுவர்கள் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் நடராசா சத்தியா, (வயர் 12), நடராசா செமியா (வயது - 8), பாலசிங்கம் சிந்து (வயது - 6) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இதன் போது ஜெயலட்சுமி (வயது 46) என்பவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.





பாக்தாத் மீதான தாக்குதலை எதிர்கொள்ளத் தயாராகிவரும் ஈராக்கிய தற்கொலைப்படையினரதும் பொலிஸ் படையினதும் அணிவகுப்பு.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

27-03-2003 அன்று இரவு புதுக்குடியிருப்பில் இருந்து முல்லைத்தீவிற்கு வாகனத்தில் எடுத்துக் சென்ற விற்பனைக்குரிய புடைவைகள் அடங்கிய பொதி ஒன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு திருக்குமரன் புடைவை மாளிகையினருடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(சி-7735)

சந்திரசேகரம் டேவிற் சாந்தகுமார் ஆகிய எனது அ.அட்டை பேர்சுடன் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 27-03-03 அன்று மாலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (2821)

### தேவை

சில்லறைப் பணம் எமக்குத் தேவையாக உள்ளது. 1000ரூபா தருபவர்களுக்கு 50ரூபா வீதம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு; மதி உணவகம், பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு. (சி-7729)

### விற்பனைக்குண்டு

புத்தம் புதிய முச்சக்கரவண்டி (TITUS AUTO) விற்பனைக் குண்டு. தொடர்புகட்கு, ச.கனகரத்தினம், 2ஆம் வட்டாரம், முள்ளியவளை. (2822)


### சிரமதானம்

தியாக தீபம் அன்னை பூபதி அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவாக நேற்று முன்தினம் திருமுறிகண்டி வர்த்தகர்களால் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது. முறிகண்டி இந்து வித்தியாலய மைதானம் வர்த்தகர்களால் துப்புரவு செய்யப்பட்டது.

## யாழ். குடா நாட்டிற்கு திரும்பியோரில்

# 40 சதவீதமானோர் சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியவில்லை

வன்னியில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு மீளக்குடியேறச் சென்ற நாற்பது வீதமான மக்கள் இதுவரை மீளக்குடியேற முடியாத நிலையிலுள்ளனர். வன்னிப் பகுதியில் இருந்து 41,598 குடும்பங்கள் யாழ்.குடா நாட்டுக்கு சென்றுள்ளன. இவர்களில் நாற்பது வீதமானோர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியாத நிலையிலுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை எனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால், இப்போது சென்றுள்ள மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்து வருகின்றனர். யாழ். குடாநாட்டில் பொது மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தொடர்ந்தும் படையினர் தங்கியுள்ளனர். இந்த நிலையும் கணிசமானளவு மக்கள் மீளக்குடியமர முடியாமைக்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நிர்வாக சபைத் தெரிவு

கிளிநொச்சி உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 28 ஆம் திகதி கிராமசேவை அலுவலர் வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தலைவராக சி.கணேஸ்குமார், செயலராக ஆ.சிவநேசன், பொருளாளராக சி.தர்மகுலசிங்கம், துணைத் தலைவராக சி.செபநேசன், துணைச் செயலராக சி.சந்திரராசா, ஆகியோர் தெரிவுசெய்யப்பெற்றனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் பொன்.நித்தியானந்தன், கிளி. மாவட்ட நிர்வாக சேவை நிர்வாக பொறுப்பாளர் ராதை, கிளி. மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் வின்சன், வாசீகன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (சோ,லோ)

# கிளிநொச்சி கச்சேரி
# கேள்விகள் கோரும் அறிவித்தல்

கிளிநொச்சி கச்சேரித் திணைக்களக் கேள்விச்சபைத் தலைவரால், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்தும் (**ICTAD M** 7க்கு பதிவு செய்தவர்கள்) அனுமதிக்கப்பட்ட

பதிவுக்காகத் தேவைப்படும் மீளப்பெறக்கூடியதும் மீளப் பெறமுடியாததுமான பதிவுத் தொகைகள் பின்வருமாறு அமையும்.

1. தேவைப்படும் பதிவுத் தொகை - **85,00000/-**
2. மீளப் பெறக்கூடிய வைப்புத் தொகை - **60,000/-**
3. மீளளிக்க முடியாத கொடுப்பனவுத் தொகை - **1000/-**

கேள்வி கோருவோர் கேள்விகளைச் சமர்ப்பிக்கும் பொழுது பின்வரும் நிபந்தனைகளை அவதானிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

I . கேள்வி கேட்கும் தொகை **85,00000/-** க்கு அல்லது அதற்கு மேலான தொகைக்கு பதியப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து மட்டுமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

II . கேள்விகள் இதற்கெனத் தயாரிக்கப்பட்ட பட்டியலில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவற்றை மீளப் பெறக்கூடியதும் மீளப் பெறமுடியாததுமான தொகையை காசுக்கட்டளை மூலம் அல்லது வங்கி உண்டியல் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். காசுக்கட்டளை அல்லது வங்கி உண்டியல் அரசாங்க அதிபர் கிளிநொச்சி என்ற முகவரிக்கே பெறப்படல் வேண்டும்.

III . கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகுசீல் வைக்கப்படுவதுடன் (அரக்கு முத்திரை) 2003-04-15ஆம் திகதி மு.பகல் 11.00 மணிக்கு முன்னராக இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும் அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும். கேள்விகளை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ***"கிளிநொச்சி மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம் கட்டட நிர்மாண வேலைக்கான கேள்விகள்"*** எனக் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள கேள்விச் சபை, கச்சேரி கிளிநொச்சி என்று முகவரியிடப்படல் வேண்டும்.

1 * கேள்விகள் யாவும் கேள்வியாளர்களால் கையொப்பம் இடப்படுவதுடன் மாற்றங்கள், திருத்தங்கள் யாவும் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். கேள்விகளில் காட்டப்பட்ட விகிதங்கள் யாவும் இலக்கங்களிலும், சொற்களிலும் இருத்தல் வேண்டும்.

* கேள்விப்படிவங்கள் 2003-04-08ஆம் திகதி பி.பகல் 4.45 மணிவரை வழங்கப்படும்.

* கேள்விகள் 2003-04-15ஆம் திகதி மு.பகல் 11.00 மணியளவில் இவ்வலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விதாரரோ அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளோ கேள்விகள் திறக்கும் நேரத்தில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

* ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் அவருடைய கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவித்தல் கிடைத்த ஒருவார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்பில் பணத்தினைச் செலுத்துவதுடன் இதற்கான ஓர் ஒப்பந்தத்திற்கும் உட்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின், அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது நிராகரிக்கவோ அல்லது எந்த ஒரு கேள்வியின் எந்த ஒரு பகுதியையும் ஏற்றுக்கொள்ளவோ அரசுக்கு உரிமையுண்டு.

கேள்விதாரர்கள் கேள்விகளைச் சமர்ப்பிக்கும் முன்னர் வேலைகள் தொடர்பான வரைபடங்கள் மற்றும் விபரங்களை இவ்வலுவலகத்தில் பரிசீலனை செய்யும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் இவ்வலுவலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

**தி.இராசநாயகம்,**
**தலைவர்,**
**திணைக்களக் கேள்விச் சபை,**
**அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்.**

**கச்சேரி கிளிநொச்சி**
**01-04-2003**

(சி-8043)

# கூட்டுப்படைகளின் தாக்குதல் தொடர்கிறது

# பாக்தாத்தில் பெருமளவு கட்டடங்கள் அழிந்தன!

## -போரை எதிர்கொள்ள சதாம் ஆலோசனை

**ஈராக் மீதான அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட கூட்டுப்படைகளின் தாக்குதல்கள் ஆரம்பித்து பதின்மூன்றாவது நாளான நேற்று தலைநகர் பாக்தாத் உள்ளிட்ட பல முக்கிய நகர்ப் பகுதிகள் கடுமையான விமான மற்றும் ஏவுகணைத் தாக்குதலுக்கு உள்ளாகின. இதனால் சதாம் ஹுசைனின் மற்றொரு மாளிகையும் அழிக்கப்பட்டதாக கூட்டுப்படை வட்டாரங்கள் கூறுகின்றன.**

தலைநகர் பாக்தாத்தில் பெரும்பாலான கட்டடங்கள் விமான குண்டுத் தாக்குதல்களிலும், ஏவுகணைத் தாக்குதல்களிலும் அழிக்கப்பட்டுவிட்டதாக பாக்தாத்திலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு அல் அமின் நகர் மீதும் நேற்று கடுமையான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, போரைத்தவிர்ப்பதற்கான அதனை முன்னெடுத்துச் செல்வதற்கான, அத்தோடு எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.



யுத்தம் ஆரம்பமாக முன் பாக்தாத் நகர வீதியொன்றின் தோற்றம்

ஈராக்கிய யுத்தத்தால் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளையடுத்து அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் துருக்கி மற்றும் பெல்ஜியம் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். இந்த நாடுகளிடம் தமக்கு ஆதரவாகச் செயற்படுமாறு கோரவுள்ளதாக நம்பப்படுகிறது.

இந்நிலையில், ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் தனது படைத்தளபதிகளுடன் நேற்று முன்தினம் சந்தித்து தாக்குதலை எதிர்கொள்வது தொடர்பான திட்டங்களை ஆராய்ந்துள்ளார். இதனை ஈராக்கிய தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

இத்தகைய நிலையில் ஐ.நா பேரவையின் அவசர கூட்டமொன்றை அனைத்து முஸ்லிம் நாடுகள் கூட்ட முடிவுசெய்துள்ளன.

ஈராக்கில் போர் நீடித்தால் உலகம் முழுவதும் இஸ்லாமிய தீவிரவாதம் தீவிரமடையும் என்று எகிப்திய சனாதிபதி கொஸ்னி முபாரக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



அமெரிக்க கூட்டுப்படைகள் பாக்தாத்தில் நடத்திய விமானத் தாக்குதலின் கோரம். ·இடிபாடுகளிடையே ஏற்பட்டுள்ள குழியில் நீர் நிறைந்து காணப்படுகின்றது





உணவு, குடிநீருக்காக வரிசையில் காத்திருக்கும் கூட்டுப்படையினர்.

## அதிகாரிகளை காணவில்லை

அமெரிக்க கடற்படையதிகாரிகள் நான்குபேரை ஏற்றிச்சென்ற கவசவாகனம் யூப்பிரட்டீஸ் நதியில் வீழ்ந்து மூழ்கியது. இவர்கள் நான்கு பேரும் இது வரை உயிருடனோ அல்லது சடலமாகவோ மீட்கப்படவில்லை.

வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதினாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் அமெரிக்க தூதரகம் முன் சனாதிபதி புஷ்சின் உருவப் பொம்மையுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் கம்யூனிஸ்ட்டுக்கள்.

## கூட்டுப் படை தாக்குதலில் 13 பொதுமக்கள் பலி!

அமெரிக்க கூட்டுப்படைகள் நேற்று நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 13 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதுடன், வீடுகள் பலவும் அழிக்கப்பட்டன.

அல் அமின் நகர குடியிருப்பு பகுதி மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 6 பொதுமக்கள் பலியாகினர். மற்றும் பெருமளவு வீடுகளும் சேதமடைந்தன.

மேலும் சோதனை நிலையமொன்றில் நிற்காது சென்ற காரொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட ஏழு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

## அமெரிக்காவின் தற்போதைய போக்கிற்கு அரபு லீக் கடுமையான கண்டனம்

சிரியா மற்றும் ஈராக் நாடுகள் மீது அமெரிக்கா கொண்டுள்ள கடும் போக்கிற்கு அரபு லீக் கண்டனம் தெரிவித்துள்ளதோடு எச்சரிக்கையும் செய்துள்ளது.

சிரியா, ஈரான் நாடுகள் ஈராக்கிற்கு உதவிகளை அளிப்பதாக அமெரிக்கா அண்மையில் குற்றம் சாட்டியிருந்ததுடன் அது குறித்து தனது ஆட்சேபத்தையும் வெளியிட்டதுடன் இந்நாடுகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கருத்துப்படப் பேசியுமுள்ளது.

இந்நிலையில் சிரியா மீதோ ஈரான் மீதோ அமெரிக்கா கை வைக்குமானால் மத்திய கிழக்கிலும் ஏனைய பிரதேசங்களிலும் ஏற்படும் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்று அரேபிய லீக் எச்சரித்துள்ளது.

## 'பொடோ' குறித்த கருணாநிதியின் கோரிக்கை பாரதிய ஜனதா கட்சியால் நிராகரிப்பு

(புதுடில்லி)

'பொடோ' சட்டத்தை அகற்ற வேண்டும் என்ற தி.மு.க தலைவர் மு.கருணாநிதியின் கோரிக்கையை பாரதிய ஜனதாக் கட்சி நிராகரித்துவிட்டது.

பொடோ சட்டத்தை அகற்ற முடியாது என்று பி.ஜே.பி தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

### வை.கோ.வின் நிலைப்பாட்டிலும் மாற்றம்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை.கோ பொதுக்கூட்டம் ஒன்றில் பேசியது பொடோ சட்டவிதிகளின் கீழ் அடங்காது என்று நேற்று மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் புதிதாக தாக்கல் செய்த ஒரு மனுவில் தெரிவித்துள்ளது.

சென்ற ஆண்டு யூன் மாதம் வை.கோ பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரிந்ததே.



பாக்தாத்திற்கு தென்கிழக்கே விமானக் குண்டுத் தாக்குதலால் இடிந்த கட்டடப் பகுதியில் தனது உடமைகளைத் தேடும் ஈராக்கிய சிறுவன்.



ஈராக்கிய பெண்ணொருவரை மிகுந்த எச்சரிக்கையுடன் நெருங்கும் பிரிட்டிஷ் படைவீரர்.



ஈராக்கை விட்டு வெளியேற எல்லையில் காத்திருக்கும் மக்கள்.

# நெருங்கி வரும் கூட்டு



இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இந்திய சமஷ்டி முறை குறித்துப் பரிசீலிக்க ஜே.வி.பி. தயாராகியுள்ளதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் தேர்தல் கால புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளும் முயற்சியின் பயனாகவே ஜே.வி.பி. இந்த முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

சனாதிபதி முறையை நீக்குவது தொடர்பாகவும் பாராளுமன்றத் தேர்தலுக்கான விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை நீக்கி புதிய தேர்தல் முறையொன்றை உருவாக்குவது தொடர்பாகவும் ஏற்கனவே இவ்விரு கட்சிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்பட்டுவிட்டது.

அதனைவிட தனியார்மயமாக்கல் உட்பட பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பது தொடர்பாகவும் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

அடுத்த தேர்தலில் போட்டியிடும் உறுப்பினர்களைப் பங்கிட்டுக் கொள்வதிலும் ஜே.வி.பி.யும் சு.க.வும் பல விட்டுக் கொடுப்புகளுக்குத் தயாராகவே இருந்து வருகின்றன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுவதற்கும் அவை தயாராகிவிட்டன. ஏற்கனவே இம்மாதம் நடைபெற்ற அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அவை இணைந்து பங்குகொண்டும் இருக்கின்றன. தொடர்ந்து எவ்வாறான போராட்டங்களை முன்னெடுப்பது என்பது தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றன.

ஆனால் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் இவ்விருகட்சிகளும் இணக்கப்பாட்டுக்கு வருவதில் இழுபறி நிலை தோன்றியிருந்ததாகவே தகவல்கள் வெளியாகியிருந்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்த மட்டில் தாம் ஆரம்பித்து வைத்த சமாதான முயற்சிகளின் தொடர்ச்சியாகவே இன்றைய நடவடிக்கை கள் இருப்பதாக பீற்றிக்கொள்கிறது.

**- வேலவன் -**

ஒருபுறம் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட கொடூர யுத்தத்தைச் சனாதிபதி சந்திரிகா சமாதானத்துக்கான யுத்தம் என்றே வர்ணித்து வந்தார். அதேவேளை, அவர் யுத்தத்தைத் தீவிரமாக்கமுன்பு ஒரு தீர்வுப் பொதியை முன்வைத்தார். அவரது முதலாவது ஆட்சிக் காலத்தின் இறுதிப் பாராளுமன்ற அமர்வின்போது இந்தப் பொதியை சிதைவடைந்த நிலையில் சமர்ப்பித்திருந்தார் இந்தப் பொதியை ஏற்பார் எவரும் இல்லாத நிலையில் அவர் பிரேரணையைத் திருப்பிப் பெற்றுக் கொண்டார்.

ஜே.வி.பி.யுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையின் போது இப்பொதியை ஜே.வி.பி. ஏற்றுக் கொள்ளவேண்டும் எனக் கோரப்பட்டதாகவும் ஆனால் ஜே.வி.பி.யினர் அதற்குத் திட்டவட்டமான மறுப்பைத் தெரிவித்து வந்தனர்.

ஜே.வி.பியைப் பொறுத்த மட்டில் இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலமான தீர்வையே அது வலியுறுத்திவந்தது. இன்றைய சூழலிலும் அது அதனையே தனதுமுடிந்த முடிவாகக் கொண்டுள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக நசுக்கப்பட வேண்டும் என்பதே அதனது உறுதியான கொள்கையாகும். அதன் மூலம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பறிக்கப்பட வேண்டும் என்பதும் அதனது விருப்பமாகும்.

இவ்வாறான நிலையில் அரைகுறையான ஏற்பாடுகளை; தீர்வுத் திட்டங்களைக் கூட மறுதலித்து வந்தது. இலங்கையில் முக்கியமான பிரச்சினையொன்று தொடர்பான இணக்கப்பாடு காண்பதில் ஏற்பட்ட தாமதம், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதில் முட்டுக் கட்டையாக இருந்து வந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வேறும் சில விடயங்களில் உடன்பாடு காணப்படுவதில் ஏற்பட்ட இழுபறி நிலையும் புரிந்துணர்வு ஒப்பந்தம் தாமதமடைந்ததற்குக் காரணமாக இருந்திருப்பினும் முக்கியமாக இனப்பிரச்சினை தொடர்பாக உடன்பாடு காண்பதில் சிக்கல் எழுந்ததாகவே தெரிவிக்கப்பட்டிருந்தது.



இதேவேளை, ஒரு வருடத்திற்கு சற்று அதிகமான காலமே ஐக்கிய தேசிய முன்னணியில் ஆட்சி நடைபெற்றிருக்கின்ற வேளையில் அதன் பூரண ஆயுட்காலம் முடியுமுன்னரே கலைத்துவிட சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அவ்வாறு கலைத்துவிட்டு தேர்தலொன்றை நடத்துவதே அவ்விரு கட்சிகளினதும் மூர்க்கமான விருப்பமாகும்.

இந்த விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள பெரும் முட்டுக் கட்டையாக இருப்பது, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களாகும். இப்பேச்சுவார்த்தை தொடருமாயின் - அது வெற்றிகரமாகவும் நடைபெறுமாயின் ஆட்சிக் கலைப்பு சாத்தியமாகாது. இதன் காரணமாகப் பேச்சுவார்த்தைகளை முறியடிக்க பொதுசன ஐக்கிய முன்னணி - குறிப்பாகச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது அதிகாரத்தைப் பயன்படுத்தித் தீவிரமாக முயல வேண்டும் எனபதனையே ஜே.வி.பி. அன்று முதல் வலியுறுத்தி வருகிறது. அதனையே அது இப்போதும் வற்புறுத்தக்கூடும்.

ஆனால், சமாதான முயற்சிகளுக்கு மறைமுகமான அழுத்தத்தை மட்டுமே கொடுக்க முடியும் என்பது இன்றைய யதார்த்தமாகும். சனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரின் ஆலோசனை சமாதான முயற்சிகளை நேரடியாக இப்போது எதிர்ப்பதென்பது சர்வதேச ரீதியாக பாதகமான விளைவை ஏற்படுத்துமென்பதாகும்.

இதனால் தான் விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தனியார் மயமாக்கல் எதிர்ப்பு. ஏன் அமெரிக்கா ஈராக் மீது தொடுத்துள்ள யுத்தத்திற்கு எதிர்ப்பு என்ற போர்வையில் கூட சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஜே.வி.பி.யினரும் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர்.

கடந்த வெள்ளியன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான கூட்டத்தில்கூட எவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்வது என்பது குறித்த ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இந்தக் கூட்டத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொள்ளாமையால் முக்கிய முடிவுகள் எவையும் எடுக்கப்படாவிடினும். ஜே.வி.பி இந்திய சமஷ்டி குறித்து ஆராயவென இந்தியா செல்லும் பொ.ஐ.மு குழுவுடன் இணைந்து செல்ல இணக்கம் தெரிவித்திருப்பதானது முக்கியமானதொரு மாற்றமாகும். அதாவது ஜே.வி.பி-சு.க கூட்டு ஏற்படும் சாத்தியம் நெருக்கமாக வந்துள்ளது என்பதனையே வெளிப்படுத்துகிறது. ஆனால், அதற்காக இனப்பிரச்சினை விவகாரத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு விட்டதாக அடித்துக்கூறி விட முடியாது.

ஏற்படப்போகும் கூட்டுக்கு இருந்த முட்டுக்கட்டையைத் தளர்த்தி விடும் நோக்கத்தை ஜே.வி.பி கொண்டிருக்கலாம். ஆனால் உண்மையிலேயே சமஷ்டி முறையிலான தீர்வொன்றை நோக்கிச்செல்ல ஜே.வி.பி உதவும் எனக் கூறஇயலாது.

அதிலும் ஐ.தே. முன்னணி எடுத்து வரும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை ஜே.வி.பி.யும், சு.க.வும் இணைந்து எடுக்கும் என்ற முடிவை நாம் பெற்றுவிட முடியாது.

இப்போது பொதுசன ஐக்கிய முன்னணிக்குத் தேவை ஆட்சியை எவ்வாறேனும் பெற்றுவிட வேண்டும் என்பதாகும். அதற்கு ஜே.வி.பி.க்கு உள்ள வாக்குப்பலத்தைப் பெற்றுவிட அது முயல்கிறது. ஜே.வி.பியைப் பொறுத்தமட்டில் தற்போதுள்ள நிலையில் தனித்துப் பாராளுமன்றத்தைக் கைப்பற்றிவிட முடியாது. எனவே பொ.ஐ.மு. வுடன் அதிகாரத்தைப் பங்குபோட முனைகிறது.

எவ்வாறாயினும் இவை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான அமைதி முயற்சியின் மனப்பூர்வமான பங்களிப்பை மேற்கொள்ளப்போவதில்லை என்பது மட்டும் வெளிப்படை. இவ்வாறான நிலையில் தற்காலிக உடன்பாடுகளுக்காக இவை பல்வேறு கருத்துக்களை முன்வைப்பது குறித்தே அவை கருத்துக்களைக் கூறிவருகின்றன என்றே கூறவேண்டும். □

---

# புலனாய்வுப் பிரிவு கட்டமைப்புக்களை மாற்றி அமைக்க பிரதமர் உத்தரவு!

## -தற்போதைய செயற்பாடுகளில் அதிருப்தி

(கொழும்பு)

சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவுக் கட்டமைப்புக்கள் அனைத்தும் மாற்றி அமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

முப்படைகளினதும் பொலிசாரினதும் புலனாய்வுப் பிரிவுகள் அனைத்தையும் உடனடியாக மாற்றி அமைக்குமாறு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தேசிய பாதுகாப்பு உள்துறை அமைச்சுகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இப்பிரிவுகளில் கடமையாற்றும் அதிகாரிகள் சரியான தகவல்களைக்கொடுக்காத காரணத்தினாலும் திறம்பட செயற்படாததினாலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வன்னியிலும் மட்டக்களப்பிலும் உள்ள வாக்காளர்களுக்கு கடந்த பொதுத் தேர்தலின் போது வாக்களிக்க இடம் அளிக்காத வகையில் நீதிமன்றம் இப்பிரிவைக் குற்றம் சுமத்தியிருந்தது. இதுவும் கட்டமைப்பு மாற்றத்திற்கானதொரு காரணமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் வன்முறைகளுக்கு எதுவித நடவடிக்கையுமில்லை

## - சாடுகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கடந்த பொதுத் தேர்தலிலும் மாகாணசபைத் தேர்தலிலும் இரண்டாயிரத்து ஐந்நூறு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இது தொடர்பாக அறிக்கை விடுத்திருப்பினும் இது தொடர்பில் அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜ பக்ச குற்றம் சாட்டியுள்ளார்.

அரசு பதவிக்கு வந்தபின் தேர்தல் வன்முறையில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கட்சி பாகுபாடின்றி நட்டஈடு வழங்கப்படும் என பாராளுமன்றத்தில் பல முறை அறிவித்திருந்தார்.

தற்போது இது தொடர்பாக அரசு மௌனம் சாதிப்பதாக மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கிறது.

# கட்சிகளிடையே பலப்பரீட்சை 80,000 பேர் ஐ.தே.கவில் இணைவு

(கொழும்பு)

இலங்கையின் இரு பிரதான கட்சிகளான சிறீ.ல.சு.கவும் ஐ.தே.கவும் தமது கட்சிக்கு பலம் சேர்க்கும் வகையில் அண்மைக்காலங்களில் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக கடந்த சில தினங்களாக மாத்தறை மாவட்டத்தில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்ட ஐ.தே. கட்சி அங்குள்ள 7தொகுதிகளிலும் சுமார் 80.000 ஆதரவாளர்களைத் தம்வசம் இணைத்துள்ளது.

மேலும் ஐ.தே.மு அரசின் தற்போதைய அரசியல் சூழ்நிலையையும் சமாதான முயற்சிகளிலும் தென்பகுதி மக்கள் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளனர். என்பதை அறியும் நோக்கில் கட்சியின் செயலாளர், அமைப்பாளர்கள், அமைச்சர்கள் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்தும் மக்கள் மனதை அறியும் நடவடிக்கையினை நிறைவு செய்துள்ளனர். இதன் போதே அக்கட்சிக்கு 80.000 ஆதரவாளர்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளமை தெரிய வந்துள்ளது.

# இராணுவச் சமநிலையில் மாற்றம் யுத்த நிறுத்தத்தைக் கேள்விக்குள்ளாக்கும்!

யாழ். நகர இருதய நிலப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பாரிய படைத் தளத்தொகுதி ஒன்றை நிர்மாணிக்க முற்பட்டுள்ளமையானது இன்று சர்ச்சைக் குரியதொருபெரும் பிரச்சினையாக எழுந்துள்ளது. யாழ். ஞானம்ஸ் விடுதி, சுபாஸ் விடுதி ஆகியவற்றில் இருந்து வெளியேறும் துருப்புக்கள் நிலைகொள்வதற்கென அரசாங்கத் தரப்பில் விளக்கம் அளிக்கப்படினும், அப்பகுதியில் அப்படைத் தளத் தொகுதியை அமைத்தல் என்பது ஓர் இடமாற்ற நடவடிக்கை என்று கொள்ளத்தக்கதல்ல. ஓர் கேந்திரநிலையத்தில் நிலை கொள்ளுதல் என்ற இராணுவச் சிந்தனையின் நோக்கத்தின் பாற்பட்டதொன்றாகும்.

அதாவது, இராணுவம் நிலை கொள்வதற்கெனத் தேர்ந்தெடுத்துள்ள பகுதியானது. யாழ். நகரைப் பொறுத்து மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததொரு பகுதியாகும். யாழ். நகரத்தின் இருதய நிலப் பகுதியின் தென்பகுதியைமுழு அளவில் ஆக்கிரமிப்பதான திட்டமானது யாழ். குடாநாட்டில் இராணுவச் சமநிலையையே மாற்றி அமைத்துவிடக் கூடியதும் ஆகும்.

யாழ். சுப்பிரமணியம் பூங்கா, யாழ். நகர மண்டபம், யாழ். மாநகரசபை அலுவலகம், வாடிவீடு, பொலிஸ் நிலையம் உள்ளடங்கலான யாழ். கோட்டைப் பகுதி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் உள்ளடங்கலாக அமைப்பதற்கெனத் திட்டமிட்டுள்ள இப்படைத்தளத் தொகுதியானது யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான பெருமளவு நிலப்பரப்பை கபளீகரம் செய்வதோடு, யாழ். நகரின் தென்பகுதியில் ஒரு 'இரும்புச் சுவர்' ஒன்றை அமைப்பது போன்றதொரு நடவடிக்கைகளாகும்.

யாழ்.குடா நாட்டின் வடக்கில் பலாலி,காங்கேசன்துறை போன்று தெற்கில் இப்படைத்தளத்தொகுதி அமையக் கூடியதாகும். இது யாழ். நகரின் இருதய, நிலப்பகுதியில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற ரீதியில் சிறிலங்கா இராணுவம் நிலை கொள்வதற்கு வழி வகுக்கக்கூடியதொன்றாகும். அது மாத்திரமல்ல தற்பொழுது யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்திடம் உள்ள பிரதேசங்களைச் சுற்றி அமையப்பெறும் ஒரு வளையத்தின் ஒரு பகுதியாகவும் அமையும்.

அரசின் இந்நடவடிக்கையானது விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாட்டின் அடிப்படைக்கு மாறானவை மட்டுமல்ல, இவ்உடன்பாட்டின் நோக்கத்திற்கும் மாறானதொன்றாகும். அதாவது, யுத்த நிறுத்தத்தின் அடிப்படைக் காரணியாகவுள்ள இராணுவச் சமநிலையை மாற்றக்கூடியது மட்டுமல்ல, இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவித்தல் என்ற உடன்பாட்டின் நோக்கத்திற்கும் மாறானதாகும்.

விடுதலைப்புலிகளுக்கும் -சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் ஓர் யுத்தநிறுத்தம், புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டதெனில், இருதரப்பின் இடையேயும் காணப்பட்ட இராணுவச்சமநிலை அதற்கு அடிப்படையானதாகும். ஆகையினால் அவ் இராணுவச்சமநிலையில் மாற்றம் ஏற்படாதவரையிலேயே இவ்யுத்த நிறுத்தமும் புரிந்துணர்வு உடன்பாடும் முக்கியத்துவம் பெறுகின்றன.

விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான இராணுவச் சமநிலை பேணப்படுதல் வேண்டும் என்பதில் சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் தீவிர கவனம் கொண்டுள்ளனர். யாழ். குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்குமாறு கோரியபோது இராணுவச் சமநிலையைப் பாதிக்கும் எனக் கூறி அதற்கான அனுமதி இராணுவத் தரப்பால் மறுக்கப்பட்டது. இதனைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் ஏற்றுக் கொண்டாற்போன்றே இருந்தது.

இந்நிலையில், யாழ். நகரின் தென்பகுதியில் படைத்தளத்தொகுதி ஒன்றை அமைப்பதென்பது இராணுவச் சமநிலையை மாற்றியமைக்கும் என்பதை எவருமே நிராகரித்துவிடமுடியாது. ஆகையினால் இவ்விடயமானது போர் நிறுத்தத்திற்கு அடிப்படையாகவுள்ள இராணுவச் சமநிலையில் மாற்றத்தைக் கொண்டுவர ஏதுவானால், யுத்த நிறுத்த உடன்பாடு என்பது தவிர்க்க முடியாது பல வீனப்பட்டுப்போவது எதிர்பார்க்கத் தக்கதாகவே இருக்கும்.

விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்தமானது தொடர்ந்து அமுலில் இருக்க வேண்டுமானால் இரு தரப்பிற்கும் இடையிலான இராணுவச் சமநிலை இருத்தல் அவசியமானதாகியுள்ளது. ஆனால், யதார்த்தத்தில் சிறிலங்கா அரசு இராணுவ ரீதியில் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டுள்ளது என்றே கூறலாம்.

சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்து அது தொடர்ச்சியாக நவீனப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதோடு, பெருக்கமடைந்தும் செல்கிறது. ஐ.தே. முன்னணி அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இவ்விடயத்தில் திறமையாகச் செயற்பட்டு வருகின்றார் என்றே கொள்ளுதல் வேண்டும் இதற்கு அரசு என்ற ரீதியில் சிறிலங்காவிற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதாகிறது.



அமெரிக்க நவீன ரோந்துக் கப்பல்

இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு, புதிய பயிற்சித் திட்டங்கள், நவீன ஆயுதக் கொள்வனவுகள் என நவீனப்படுத்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. அண்மையில் கூட அமெரிக்காவிடம் இருந்து நவீன ரோந்துக் கப்பல் ஒன்றை சிறிலங்கா அரசு பெற்றுக் கொண்டுள்ளது.

சிறிலங்கா அரசின் இந்நடவடிக்கையானது திட்டவட்டமாக இராணுவச் சமநிலையில் ஒரு மாற்றத்தைத் தோற்றுவிக்கக் கூடியதாகும். அதாவது சண்டை இடம்பெற்றால் கூட மாற்ற முடியாத இராணுவச் சமநிலையின்மையை யுத்த நிறுத்த காலத்திற்குள் எட்டிவிட சிறிலங்கா இராணுவத்தரப்பு முயல்வது போல் உள்ளது.

சிறிலங்கா இராணுவத் தரப்பின் இந்நடவடிக்கையானது. திட்டவட்டமாக இராணுவ மேலாதிக்க நிலையை நோக்கமாகக் கொண்டதாகும். இது இராணுவச் சமநிலையைப் பாதிப்பதாகவும், இறுதியில் யுத்தநிறுத்த உடன்பாட்டை உதாசீனம் செய்வதாகவும் மாறி விடக்கூடும்.

ஏனெனில், இராணுவம் தமது நிலை மேலோங்கியதாக உள்ளது எனக் கருதும் பட்சத்தில் அது யுத்த நிறுத்தத்தை உதாசீனம் செய்வதொன்றும் கடினமானதாக இருக்கமாட்டாது. ஏற்கனவே சிறிலங்கா கடற்படை யுத்த நிறுத்தத்தை உதாசீனம் செய்யும் ஒன்றாகவே உள்ளது. இந்நிலையில் மேலும் அது பலப்படும் பட்சத்தில் அதன் செயற்பாடு யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறானதாகப் போனால் ஆச்சரியப்பட எதுவும் இருக்கமாட்டாது.

ஆகையினால், யுத்தநிறுத்தம் வலுவுள்ளதாக, உறுதியான நிலையில் கடைப்பிடிக்கப்பட வேண்டுமானால் சிறிலங்காஅரச இராணுவத்தைப் பலப்படுத்தும் படை நடவடிக்கைகளை அரசு கைவிடுதல் வேண்டும் அல்லது விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியில் சிறிலங்கா இராணுவத்திற்கு இணையாக சமநிலையைப் பெறும் வகையில் வளர்வதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும். அதாவது இயக்கத்திற்கு உறுப்பினர்களைச் சேர்க்கவும் ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்யவும் இறக்குமதி செய்வதற்கும் அனுமதித்தல் வேண்டும்.

அவ்வாறு இல்லாது போனால் சிறிலங்கா அரசின் இராணுவம் சமாதானத்தின் அடிப்படையாகவுள்ள இராணுவச் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் யுத்த நிறுத்தத்தைப் பலவீனப்படுத்தி விடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் அதாவது சமநிலைக்கு மாறாக இராணுவம் பெறும் மேலாண்மையானது சமாதான முயற்சிகளுக்கும் யுத்தநிறுத்தத்திற்கும் முற்றுப்புள்ளி வைப்பதாகிவிடும்.

**- ஜெயராஜ்**

## வங்காலையில் மீள்குடியமரச் சென்றவர் மிதிவெடியில் சிக்கி படுகாயம்!

வங்காலைப் பகுதியில் மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வங்காலை தோமஸ் வீதியில் மீளக்குடியமருவதற்காகச் சென்ற போது இந்த மிதிவெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

அப்பகுதியைச் சேர்ந்த எஸ்.பீரிஸ்(வயது 36) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

தனதுவீட்டினைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே இவர் மிதிவெடியில் சிக்கினார் (மி)

## தொலைபேசிகள் செயலிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொலைபேசி இணைப்புக் கம்பிகளை விஷமிகள் திருடிவருவதால் மட்டக்களப்பில் தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நூற்றுக்கு மேற்பட்டதொலைபேசிகள் செயலிழந்திருப்பதாகத் தெரியவருகிறது.

## இந்தியாவிலிருந்து திரும்பியோர் பதிவு செய்யக் கோரிக்கை

கடந்த காலப் போர்ச் சூழ்நிலை காரணமாக இந்தியா சென்று வசித்து தற்போதைய சமாதான சூழ்நிலையினால் மீளவும் தாயகத்திற்குத் திரும்பி, கிராம அலுவலர் பிரிவில் உள்ளவர்களை பதிவு செய்யும் செயற்பாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

இந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தியாவிலிருந்து மீளவும் திரும்பியுள்ளவர்கள் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் நேரில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

## யாழ்ப்பாண மாவட்டத்திற்கு புதிதாக 20 பேருந்துகள்

### சேவையில் திருப்தியில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு புதிதாக 20 பஸ் வண்டிகள் அனுப்பி வைக்கப்படுமென மத்திய போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

இந்த பஸ்வண்டிகள் வரும் புத்தாண்டுத் தினத்திற்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவுள்ளன. வடபிராந்திய போக்குவரத்துச்சபையிடம் 107 பஸ் வண்டிகள் தற்போது உள்ளன. இவற்றில் 79 பஸ்வண்டிகள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தற்போது 57 மார்க்கங்களில் பஸ் சேவைகள் இடம்பெறும் போதும் அவை திருப்திகரமாக இடம் பெறுவதில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## தென்னிந்தியாவிலிருந்து ஈழத் தமிழர் ஒரு தொகுதியினர் மன்னார் வருகை!

(மன்னார்)

தென்னிந்தியாவில் இருந்து ஒரு தொகுதி ஈழத்தமிழ் அகதிகள் மன்னாருக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

மண்டபம் அகதி முகாமில் இருந்து தலைமன்னார் ஊடாக ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும் பேசாலை கடற்கரையூடாக எட்டு குடும்பங்களை சேர்ந்த 18 பேரும் வந்து சேர்ந்தனர்.

இவர்களில் மூன்று குழந்தைகளும் 14 பெண்களும் அடங்குவர்.

இவர்கள் அனைவரும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்களைத் தமது சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கு மன்னார் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். (மி)

# தாளையடிப் பகுதியில் சுகாதாரக் கருத்தரங்கு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு ஆழிய வளை திலீபன் மருத்துவ... யினர் பாடசாலை மாணவர்களு க்கு மலேரியா தொற்றுநோய் சம்பந்தமாகவும் ஏனைய சுகாதார விழிப்புணர்வு சம்பந்தமாகவும் கருத்துரைகளை வழங்கி உள் ளனர். தாளையடி றோ.க. பாட சாலையில் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு வடமராட்சி கிழக்கு கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன் தலைமைதாங்கினார்.

அத்துடன் இரத்தச் சோகை யால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் இனங்காணப்பட்டு சத்துமாத் திரைகளும், குடற்புளுத்தொற் றுக்கான மாத்திரைகளும் வழங் கப்பட்டன. (11)

## பெயர் மாற்றம்

9ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஜோர்ச் சூசைப்பிள்ளை ஆகிய நான் என்னுடைய பெயரை 02.04.2003 இல் இருந்து ஜோர்ச் புதுவேந்தன் என பெயர் மாற்றம் செய் துள்ளேன். என்னுடனான எத்தொடர்புக்கும் இப் பெயரையே பயன்படுத்துவேன் எனத் தெரியப்படுத்துகின்றேன்.

இவ்வண்ணம்.
**ஜோர்ச் புதுவேந்தன்**

(சி-7734)

## கிளி/வலயக்கல்விப்பணிமனை முறைசாராக் கல்விப்பிரிவு

**கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி நெறி 38A**

கிளி. மத்திய கல்லூரியில் மேற்படி பயிற்சி நெறியினைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அனைவரும் 08-04-2003க்கு முன்னர் விண்ணப்பங்களைத் தந்துதவுமாறும்.

சாரதி அனுமதிப் பத்திரம்பெறுவோருக்கான எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்கள், வீதி ஒழுங்குவிதிகள் சம்பந் தமான வகுப்புக்களுக்கு பெயர்களைப் பதிவு செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர்,
கிளி/மத்திய கல்லூரி.

(சி-8046)

## துயர் பகிர்வோம்

### அமரர் அந்தோனிப்பிள்ளை செலஸ்ரீன்

அமரர் அந்தோனிப்பிள்ளை செலஸ்ரீன் (5ஆம் வட்டாரம் இரணைப்பாலை) எமது வித்தியாலய பணியாளர் திரு. டெனிஸ்ரன் றெஜி அவர்களின் அன்புத் தந்தை திரு. அந்தோனிப்பிள்ளை செலஸ்ரீன் அவர்கள் இறைவனடி சேர்ந்ததை அறிந்து நாமும் வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாண வர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மு.உடையார்கட்டு ம.வி.

(2823)

## துயர் பகிர்கின்றோம்

### திரு. அந்தோனிப்பிள்ளை செலஸ்ரீன்

எமது வட்டக்கச்சி பங்குத்தந்தை அருட்பணியாளர் அகஸ்ரீன் அவர்களின் அன்புச் சகோதரன் திரு. அந்தோனிப்பிள்ளை செலஸ்ரீன் அவர்கள் இறைவனடி சேர்ந்ததனால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் இணைந்து அன்னாரது ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டுகிறோம்.

புனித சூசையப்பர் இளையோர் ஒன்றியம், வட்டக்கச்சி.

(2824)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 - 10 - 1978



இறப்பு 02 - 04 - 2000

தலைமைக்காவல்துறை
**கதிரவேலு விஜயன்**
உடுப்பிட்டி, வடமராட்சி.

இன்புற்று யாமிருக்க இனிய வழி எடுத்துரைத்த
அன்புள்ள அண்ணா போல் அகிலத்தில் யாருமில்லை
கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டில் சிறந்தவராகத் திகழ்ந்து
பலவருடம் மக்களை நல் வழிப்படுத்தி – எம்
அறிவிற்கு ஒளியூட்டி எம் ஆசை அண்ணாவாகத் திகழ்ந்து
தாய் மண்ணை மீட்க களமுனை சென்று
தாய் மண்ணை முத்தமிட்டீரே – உங்கள்
இலட்சியம் என்றும் அழியாது.

என்றும் உங்கள் பிரிவில் வாடும்
**சகோதரிகள்,**
**றதி, யாழவள்.**

வட்டக்கச்சி. (3055)

# கண்ணிவெடி

## விழிப்புணர்வு வாரம்

## 01-07.04.2003

**வெடிபொருட்கள் பற்றிய உங்கள் சந்தேகங்களை அருகிலுள்ள கண்ணிவெடி விழிப்புணர்வுத் தொடர்பகத்தில் உடனடியாகவே முறையீடு செய்யுங்கள்**

**யுனிசெப் வெண்புறா நிறுவனம்**

(சி-8043)

# கிளிநொச்சி மாவட்ட செயலக

# கேள்வி கோரும் அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்ட செயலக கேள்விச் சபைத் தலைவரால் பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்தும் அனுமதிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கீழ்வரும் அட்டவணைப் பிரகாரம் உள்ள வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

| தொ. இல. | ஒப்பந்த இனங்காட்டல் எண். | கேள்வியின் பெயர் | மீளளிக்கப் படாத கட்டணம் | கேள்விப் பிணைப் பணம் |
|---|---|---|---|---|
| 01. | கிளி/மா.புபுசெ கு.வே.கே.-01 | இடிபாடுகளையும் சிறு பற்றைகளையும் அகற்றி காவலரண்களிலுள்ள இடிபாடுகளை அகற்றி சீர் செய்தல். | 500/- | 1,000/- |
| 02. | -"- -02 | கிணறுகள் திருத்தலும் புதிதாக அமைத்தலும். | 500/- | 5,000/- |
| 03. | -"- -03 | சனசமூக நிலையங்கள் திருத்துதல். | 500/- | 9,500/- |
| 04. | -"- -04 | திட்டப் பணிப்பாளர் விடுதி அமைத்தல். | 500/- | 7,500/- |
| 05. | -"- -05 | சுற்றுலா மண்டபம் மீளமைத்தல். | 500/- | 5,000/- |
| 06. | -"- -06 | கிளி/வைத்தியசாலை திருத்தம். | 500/- | 5,000/- |
| 07. | -"- -07 | மகப்பேற்று விடுதி திருத்தம். | 500/- | 5,000/- |
| 08. | -"- -08 | அரச அதிபர் இல்லம் திருத்தல். | 500/- | 5,000/- |
| 09. | -"- -09 | கமநல சேவைகள் கேந்திர நிலையம் திருத்துதல். | 500/- | 3,000/- |
| 10. | -"- -10 | மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம் அமைத்தல். | 500/- | 7,500/- |

**இதற்கான கேள்விப் படிவத்தினையும், மேலதிக விபரங்களையும் கிளிநொச்சி மாவட்ட புனர்வாழ்வுக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.**

**கேள்வி விண்ணப்பப் படிவங்கள் வழங்கும் காலம் -2003.04.03 தொடக்கம் 2003 .04. 11 காலை 10.00 மணிவரை.**

**பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 2003.04.11 காலை 11மணியளவில் இவ்வலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.**

**தி. இராசநாயகம்**
அரசாங்க அதிபர், கேள்விச் சபைத் தலைவர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8047)



சிந்தனைக்கு

எமது வீர சுதந்திர வரலாறு மாவீரர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலும் எழுதப்பட்டிருக்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 02-04-2003

## தானே உருவாக்கி......!

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி அண்மையில் தானே ஒரு சர்ச்சையினைத் தோற்றுவித்து - தற்பொழுது அதில் இருந்து விடுவித்துக்கொள்வதற்காகப் பெரும் பிரயத்தனத்தைத் தானே மேற்கொள்ளவேண்டிய அவல நிலையில் உள்ளார். "விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் இல்லை என்று நான் கூறியதாக உருவாகியிருக்கும் சர்ச்சைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்குமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன்" என திரு. ஆனந்தசங்கரி அறிக்கைவிடும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது.

திரு. ஆனந்தசங்கரியின் அபிலாசைகள் சில "கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை" என்ற ரீதியில் அண்மையில் கைநழுவிப் போயிருக்கலாம். இதனால், ஆத்திரமடைந்த அவர் தனது சீற்றத்தை பொறுப்பற்ற ரீதியில் வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனந்தசங்கரி போன்ற அரசியல்வாதிகளிடம் இருந்து இவ்வாறான கருத்துக்கள் வெளிவருவது ஒன்றும் எதிர்பார்க்க முடியாததொன்றும் அல்ல.

ஆனால், திரு. ஆனந்தசங்கரி தனது கருத்துக்களுக்கு இத்தகைய கடும் எதிர்ப்போ அன்றி விமர்சனங்களோ வெளியில் இருந்து எழுமென எதிர்பாராது இருந்திருக்கலாம். அவ்வாறு இல்லாதுவிடில், இச்சர்ச்சைக்கு, இத்துடன் கைவிடுமாறு அவர் அறிக்கை மூலம் கேட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் எழுந்திருக்கமாட்டாது.

திரு. ஆனந்தசங்கரி வெளியிட்ட கருத்துக்களுக்கு பல தரப்பில் இருந்து கண்டனங்கள் எழுந்தமைக்குக் காரணமும் இல்லாமல் இல்லை. அதாவது தமிழ் மக்களின் உணர்வுகளையும், இன்றைய அரசியல் யதார்த்தத்தினையும் அவர் புரிந்துகொள்ளத் தவறியமையே இத்தகையதொரு சூழ்நிலைக்குக் காரணமாகும்.

பல அரசியற் தலைவர்கள் மக்களின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்களாகத் தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். சில கட்சிகள், சில தலைவர்கள் தமது அபிலாசைகள், விருப்பு வெறுப்புக்களை அடிப்படையாகக்கொண்டு தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். ஆனால், இவர்கள் எத்தகைய தீர்மானங்கள் மேற்கொண்டாலும் மக்களின் அபிலாசைகளும், விருப்புக்களுமே அரசியலை தீர்மானிப்பவையாக உள்ளன.

இன்று தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தையே தமது ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்கின்றனர். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியவர்களாக, தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பலம் உள்ளவர்களாக விடுதலைப்புலிகள் உள்ளனர் என்பதே தமிழ் மக்களின் இத்தகைய முடிவிக்குக் காரணமாகும்.

இதற்காக நூற்றிற்கு நூறு வீதமானவர்களும் விடுதலைப் புலிகளையே அங்கீகரிப்பதாகவும், அவர்கள் பின்னால் நிற்பதாகவும் இங்கு கூறவில்லை. தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையோர் புலிகளை ஆதரிக்கின்றனர், ஏற்றுக் கொள்கின்றனர் என்பதே யதார்த்தமானதாகும். புலிகளுக்கு எதிரான சக்திகள் சில இருப்பின், அவர்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு முன்னுரிமை அளிக்காது - தமது சுய அபிலாசைகளுக்கு முன்னுரிமை அளிப்பவர்களாகவே இருக்கமுடியும்.

இதனைச் சர்வதேச சமூகமும், ஏன் சிறிலங்கா ஆட்சியாளரும் கூடப் புரிந்துகொண்டுள்ளனர் என்பதன் வெளிப்பாடே விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் கண்டுவிட முடியும் என அவர்கள் நம்பிக்கை கொள்ளக் காரணமாகும். அவ்வாறான நம்பிக்கை இல்லாவிடில் விடுதலைப்புலிகளுடன் அவர்கள் பேச்சுக்கள் நடத்த முன்வந்திருக்க முடியாது.

அவர்கள் கூட ஏதோ வேறு முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளாது, புலிகளுடனேயே பேசவேண்டும் என்ற முடிவிற்கு வந்தவர்கள் அல்ல. பல்வேறு வழிகளில் முயற்சித்துத் தோல்வி கண்ட பின்னர் - அரசியல் களநிலை யதார்த்தத்தினைப் புரிந்து கொண்டு மேற்கொண்ட தீர்மானமே அவர்களின் தற்போதைய நிலைப்பாடாகும்.

ஆகையினால், ஆனந்தசங்கரி போன்றவர்கள் எத்தகைய அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பினும் அது இங்கு முக்கியத்துவம்மிக்கதொன்றல்ல. ஏனெனில், விடுதலைப்புலிகளைத் தமது ஏக பிரதிநிதிகளாகத் தமிழ்மக்களும், புலிகளுடனேயே பேச வேண்டும் எனச் சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ளன. இதன் அடிப்படையிலேயே இன்றைய அரசியல் நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் ஆனந்தசங்கரி போன்றவர்களின் பேச்சுக்களும், செயல்களும் மக்கள் அவர்கள் குறித்த சரியான மதிப்பீட்டிற்கு வருவதற்கே உதவக்கூடியவையாக இருக்கும்.

# வன்னி சிறிலங்கா பிரதி கட்டளை அதிகாரி நடவடிக்கை தொடர்பாக அதிருப்தி

## - ௨ஆவது மெய்க்காப்பாளரும் காணாமல் போனார்

(கொழும்பு)

வன்னிப் பகுதிக்கான சிறிலங்காவின் பிரதி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தா பல்ல வராச்சியின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த படைச்சிப்பாய் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நாவலயிலுள்ள மேற்படி அதிகாரியின் மனைவியின் நிறுவனமொன்றில் கடமையிலிருந்த வேளை இவரின் நண்பனான ஒரு சிப்பாய் 2002 ஆகஸ்டில் காணாமல் போயிருந்தார்.

மூன்று மாதங்களுக்கு முன் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படியும் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் பலகல்ல அதிகாரிகளைப் பணித்திருந்தார்.

இதனிடையே நகரப் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரி அசோக தோரதெனிய மல்லவராச்சி இராணுவ சட்ட திட்டங்களுக்கப்பால் செயற்படுவதாகவும் சொந்த விடயங்களில் இராணுவத்தைப் பயன்படுத்துவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

# அரசியலில் பிரவேசிப்பவர்களுக்கு மனிதாபிமானம் அவசியம் தேவை!

## -சனாதிபதி சந்திரிகா போதனை

(கொழும்பு)

அரசியலில் பிரவேசிப்பவர்கள் மனிதாபிமானம் உள்ளவர்களாகவும் ஊழல்கள் அற்ற, முற்றிலும் நேர்மை வாய்ந்தவர்களாகவும் இருக்கவேண்டும் என்று சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க கூறியுள்ளார்.

அண்மையில் அமைச்சர்கள், மேல்மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் மத்தியில் சனாதிபதி உரையாற்றினார்.

சொந்த நன்மை கருதி அரசியல் களத்தில் பிரவேசிப்பவர்கள் பொதுச்சேவையில் இருந்து விலக்கப்படவேண்டும் என்று அவர் கூறினார். இன்று அனேக அரசியல்வாதிகள் பொது மக்களுக்கு சேவைசெய்யும் விருப்பத்தைக் கொண்டிராது தம்மைத்தாமே செல்வந்தர்களாக்கும் நோக்கத்தில் வாழ்வதாக அவர் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஆறு சுற்று சமாதானப் பேச்சுக்கள் முடிவடைந்த நிலையிலும், அடிப்படைப்பிரச்சினையில் கவனம் செலுத்தப்படவில்லை எனக் கூறினார்.

## -ஜே.வி.பி.யுடனான கூட்டணி-

# மிகுந்த அவதானத்துடன் செயற்படும் சந்திரிகா!

(கொழும்பு)

ஜே.வி.பி. - சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அமைவது தொடர்பான விவகாரத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு வருவதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இரு கட்சிகளுக்கும் இடையில் இன்னமும் முழுமையான இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில் ஒருவர் மாறி ஒருவராக குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.

இரு கட்சிகளின் கூட்டணி தொடர்பாக சுதந்திரக் கட்சி பின்னடித்து வருவதாக ஜே.வி.பி தலைவர் ரில்வின் சில்வா வெளிப்படையாகவே கேள்வி எழுப்பியுள்ளார்.

# இல.யில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்த இதுவே இறுதிச் சந்தர்ப்பம்!

## கனடாவின் வெளிவிவகார அமைச்சர்

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த இதுவே இறுதிச் சந்தர்ப்பம். எனவே அனைவரும் இதற்கு செயல் வடிவம் கொடுத்து நடைமுறைப் படுத்த வேண்டும். இல்லையேல் பின்னர் ஏற்படும் பாரிய இழப்புக்களை எண்ணி அனைவரும் கவலைப்படவேண்டும் என கனடாவின் வெளியுறவு அமைச்சர் டேவிட் கில்கோர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளே மிகச் சிறந்ததும், இறுதியானதுமாகும். இதனை இலங்கையர்கள் மட்டுமன்றி ஏனைய நாட்டவர்களும் உணரவேண்டும்.

சமாதான முயற்சிகளை இலங்கையில் உள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் குழப்பினாலும் நாம் அவர்களை மன்னிக்கமாட்டோம்.

அதேவேளை சமாதானத்தைக் குழப்பி, போரை ஏற்படுத்தி அதன் மூலம் ஏற்படப்போகும் பாரிய உயிர், உடைமை இழப்புக்களை சந்திப்போரும் சமாதான விரோதிகளை மன்னிக்கமாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபையை மக்களின் சொத்துக்களாகப் பேண முடிவு

## - அமைச்சர் கருஜெயசூரிய கூறுகிறார்

(மட்டக்களப்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்., மின்சாரசபை என்பனவற்றை மக்களின் சொத்துக்களாக பேணிப் பாதுகாக்கப் போவதாக அமைச்சர் கருஜெயசூரிய உறுதியளித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிறுவனங்களின் செயற்திறனை அதிகரித்து மக்களுக்கு சிறந்த வகையில் செயலாற்றும் அமைப்புக்களாக அவற்றை தரமுயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

பெற்றோலியப் பொருட்களை விநியோகிக்கும் பணியில் தனியாரின், சேவையைப் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தனியார் மயமாக்கலுக்கான நடவடிக்கை அல்ல.

தற்போதைய அரசாங்கம் வெளிப்படையான முறையில் நிர்வாகப்பணிகளை மேற்கொள்கின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொத்தணி பஸ் நிறுவனங்களை

# தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க சனாதிபதி, அரசாங்கத்துக்குத் தடை

(கொழும்பு)

கொத்தணி பஸ்நிறுவனங்களை ஈரிஸ் நிறுவனத்திடம் ஒப்படைப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை இடை நிறுத்துமாறு சனாதிபதி பிரதமரைப் பணித்துள்ளார்.

அமைச்சரவையின் அடுத்த கூட்டத்தின்போது தீர்மானம் எடுக்கும் வரை இவ்வொப்பந்தத்தில் தீர்மானம் எடுக்கப்படக்கூடாது என்று சனாதிபதி பிரதமருக்கு அறிவித்துள்ளதாக சனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொத்தணி பஸ் நிறுவனங்களை ஒப்படைப்பது தொடர்பான முரண்பாடுகளைக் கருத்திற்கொண்டு சனாதிபதி பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## - சிரான் செயலகக் கூட்டத்தில் -

# தொழிற்பயிற்சி வழங்குவது தொடர்பான மூன்று விடயங்கள் குறித்து ஆராய்வு!

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் அனுசரணையுடனான ஆய்வுப்பட்டறை நேற்றுக் காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி சிரான் செயலகத்தில் சிரான் செயலகப் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் தலைமையில் நடைபெற்றது.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனத் தலைவர் வொண்டலன்ட், இலங்கைக்கான சர்வதேச தொழிலாளர் குளோடியா நிறுவனப்பணிப்பாளர், சிரான் உபகுழு உறுப்பினர் டாக்டர் மகேஸ்வரன், தமிழீழ பொருண்மிய மதியுரையகப் பொறுப்பாளர் தாஸ், பெண்கள் அபிவிருத்தி நிறுவன பிரதிநிதிகள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர்.

மேற்படி ஆய்வுப் பட்டறை குறித்து சிரான் உபகுழு உறுப்பினர் டாக்டர் மகேஸ்வரன் தெரிவிக்கையில்,

வட-கிழக்கில் தொழில்வாய்ப்பு மற்றும் தொழிலாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குவது குறித்து ஆராயப்பட்டு மூன்று எண்ணத் திட்டக் கருத்துக்கள் முன்வைக்கப் பட்டன.

அதில் 14 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் உள்ள இளம் சிறுமிகள், பெண்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான வேலைத்திட்டம், அவர்களுக்கான பயிற்சி வழங்கல் குறித்து ஆராயப்பட்டன.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பாகவும் அவர்களது முன்னேற்ற நடவடிக்கை குறித்தும் ஆராயப் பட்டன.

மூன்றாவதாக கிளி,வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து மூன்று கிராமங்களைத் தெரிவு செய்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன்னெடுக்கின்ற மீள்குடியேற்றத் திட்டத்துடன், வேலைவாய்ப்பு, கடனுதவி ஆகியவற்றை உள்ளடக் கியதாக மூன்று திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்வதென்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதில் ஒரு திட்டத்திற்கான ஒதுக்கீடு ஏற்கனவே வழங்கப் பட்டுள்ளது. அவற்றை இனங்கண்டு அமுல்படுத்தும் முயற்சியினை மேற்கொண்டுள்ளோம் என்றார். (சோ.லோ)

## - யாழ். மாநகரசபைக்கான நிலத்தில் -

# புதிய படைத்தளம் அமைப்பதை எதிர்த்து பொதுசன அமைப்புகள் போராட முடிவு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான காணியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பாரிய ராணுவத் தளம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் இது விடயத்தில் மீள் பரிசீலனை செய்து இச் செயற்பாட்டைக் கைவிடும் என நம்புகின்றோம். அப்படி மாற்றம் ஏற்பட்டு திட்டம் கைவிடப்படாது விட்டால் எதிர்வரும் 4ஆம்திகதி (வெள்ளிக்கிழமை) ஒருங்கிணைந்த எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்பதை யாழ். பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## - மோட்டார் போக்குவரத்து -

# உதவி ஆணையாளர் அலுவலகம் செயற்படுகிறது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மக்களின் நலன் கருதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது செயற்பட்டு வருகின்றது. இங்கு வாகன உரிமை மாற்றங்கள், புதிய வாகனப் பதிவுகள், சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், வாகனங்களுக்கான வருடாந்த உரிமம் வழங்குதல் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

மேலும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் விண்ணப்பதாரர்கள் எமது அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பின்வரும் ஆவணங்களுடன் விண்ணப்பங்களை செயலகத்தில் சமர்ப்பிக்கும் படி மோட்டார் போக்குவரத்து கிளி. மாவட்ட உதவி ஆணையாளர் கந்தசாமி வேண்டியுள்ளார்.

1) விண்ணப்பப்படிவம் - எம்ரிஏ 30
2) .வைத்திய சான்றிதழ் -எம்ரிஏ 31ஏ
3) 3புகைப்படங்கள் -2"x5"அளவு
4) தேசிய அடையாளஅட்டையின் புகைப்படப்பிரதி
5) பிறப்புச்சான்றிதழ்
6) உரிய கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு (சோ.லோ)

# வடக்கு-கிழக்கு முஸ்லிங்கள் சொந்த இடங்கள் திரும்புவர்!

## அமைச்சர் ஹக்கீம் நம்பிக்கை

வடக்கு - கிழக்கு முஸ்லிங்கள் மீண்டும் தமது சொந்தப் பிரதேசங்களுக்குத் திரும்புவார்கள் என்று முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதற்காக விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படதான் விருப்பம் கொண்டிருப்பதாக மட்டக்களப்பு காத்தான்குடியில் நடைபெற்ற அரபுக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழா வைபவத்தின்போது கூறியுள்ளார்.

### போர்நிறுத்த...

டுள்ளது. இதற்குக் காரணம், பெரிய ஆளணியைக் கொண்டுள்ள புலிகள் 1700 படையினர் சென்று கொண்டிருந்த கப்பல் மீது தாக்குதல் நடத்துவதற்கு தனியாக ஒரு சிறிய படகை அனுப்பி இருக்க மாட்டார்கள். ஆனால், இது படையினரைக் கொல்வதற்காக அன்றி போர் நிறுத்தத்தை குழப்புவதற்காக நடைபெற்ற தாக்குதல் போல் தெரிகிறது என போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சம்பவங்கள் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடக்காமல் இருப்பதற்கான வழிகளை கண்டு ஆராயும்படியான தகவல்களை நாங்கள் அரசுக்கும் புலிகளுக்கும் அனுப்பவுள்ளோம். இது தொடர்பாக அடுத்த சுற்று பேச்சுக்களுக்கு இடையில் நல்ல முடிவு வரும் என எதிர்பார்ப்பதாக போர் நிறுத்த கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய போர் நிறுத்தத்தைக் குழப்புவதற்கு முயற்சிக்கும் மூன்றாவது பொது எதிரிக்கு எதிராக அரசும் புலிகளும் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

### களுத்துறை...

நிர்வாகம் ஏற்கவில்லை என்றும், இதனால் குடற்புண் நோயால் பாதிக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் வேதனைக்கும், சிரமங்களுக்கும் உள்ளாகி வருவதாக களுத்துறை சிறைச் சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது குடும்ப அங்கத்தவர்களுக்கு அறிவித்துள்ளனர்.

இதேவேளை, களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு வழங்குமாறு வெளிநாட்டில் உள்ள ஓர் நிறுவனம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரிடம் ஒரு தொகைப்பணத்தை வழங்கியதாகவும் அந்தப்பணம் இதுவரை கைதிகளுக்கு வழங்கப் படவில்லை என்றும் கைதி ஒருவர் ஊடகவியலாளருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### சமாதான...

வாக்கையும், அரசியல் செல்வாக்கையும் பாவித்து இரண்டு கட்சிகளையும் ஒற்றுமைப்படுத்தினார்.

பாராளுமன்றப் பிரதி நிதியாக இருந்த இவர், அப்பதவியை விட்டு விலகியபின் மேல்சபை அங்கத்தவராக இருந்து இரு கட்சிகளினதும் ஒற்றுமையை நிலை நாட்டினார்.

1985இல் இவர் ஆங்கிலோ அயர்லாந்து ஒப்பந்தத்தை எழுத உதவியமை குறிப்பிடத்தக்கது.

இவருடன் சிறிலங்காவுக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீவன் இவன்ஸ், ஜரிஸ் உயர் ஸ்தானிகர் பிலிப்மைக்டொனா, தெற்காசிய பிராந்திய அலுவலக லண்டன் பொது நலவாய அலுவலக பிரதித் தலைவர் ஜேம்ஸ் டொறிங் இன்பக்ஸ் நிறுவன இணைப்பாளர் றைறோன் ரூபர்டினன்ஸ் ஆகியோரும் வருகை தரவுள்ளனர்.

### அமெரிக்க...

அண்மித்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளது. இந்நிலையில் இன்று பாக்தாத்தின் எல்லையில் ஈராக்கின் கூட்டணிப்படைக்கும் தமது படையினருக்கும் இடையிலான நேரடிச் சண்டைகள் ஆரம்பமாகலாம் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை,எந்த விலை கொடுத்தும் பாக்தாத்தை கைப்பற்ற தாங்கள் தயாராக இருப்பதாக அமெரிக்க படைத்துறைத் தளபதி அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் பாக்தாத்தைக் கைப்பற்றுவதற்கான யுத்தம் இரண்டாம் உலகப் போரில் இடம்பெற்ற பேர்ளின் நகர் யுத்தம் போலவும், ரேலின் கிறாட் யுத்தம் போலவும் ஒரு இலட்சத்துக்கும் மேலான உயிர்ப்பலி கோரும் யுத்தமாக இருக்கும் என்று மேற்கத்தைய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


**மாபெரும் விளையாட்டுப் போட்டி - 2003**

**வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக் கழகம் வருடந்தோறும் நடாத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டி.**

| போட்டிகள் | கட்டுப்பணம் |
|---|---|
| 1. மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி - (A,B) | 500.00 |
| 2. மரதன் ஓட்டம் (ஆண்) - | 100.00 |
| 3. உழவு இயந்திரம் பெட்டி கொழுவுதல் - | 250.00 |

**விண்ணப்ப முடிவுத் திகதி – 13.04.2003**

**குறிப்பு**: வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள அனைத்துப் போட்டியாளர்களும் பங்குபற்றலாம்.

போட்டிகள் யாவும் புதுவருடத்தினத்தன்று (14.04.2003) நடைபெறும்.

பதிவு செய்யும் இடங்கள்:

பூங்கண்ணன் தேனீர்ச்சாலை, வற்றாப்பளைச் சந்தி.

புனிதன் பல்பொருள் வாணிபம், சந்தையடி, முள்ளியவளை.

**நிர்வாகம், மங்களேஸ்வரா வி. கழகம், வற்றாப்பளை**

சி-7824)



# மக்கள் சுகாதாரம் (ஜனசுவய)

# இலவச மருத்துவ சிகிச்சை முகாம்

**இடம் - கிளிநொச்சி மத்திய கல்லூரி**

**காலம் - 4,5 சித்திரை 2003 (வெள்ளி, சனி)**

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் விசேட நிபுணர்களால் சகல நோய்களுக்குமான சிகிச்சை மேற்கொள்ளப்படவிருக்கிறது. இம் முகாமில் சிகிச்சை பெறவேண்டியவர்கள் 04,05/04/2003 ஆம் திகதிகளில் கிளி/மத்திய கல்லூரியில் காலை 9.00 மணிக்கு சமுகமளிக்கவும்.

**பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.**

(சி-8042)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.